# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்:242/பேரூ/2025**
**நாள் : 10.12.2025**

K. சிவசாமி,
புதுவயல்,
சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
புதுவயல் பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம். – எதிர் மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், புதுவயல், 73, நடுவீதி என்ற முகவரியை சேர்ந்த திரு. K. சிவசாமி என்பவரது 09.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.07.2025 அன்று பெறப்பட்டு, 242/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், புதுவயல், 73, நடுவீதி என்ற முகவரியை சேர்ந்த திரு. K. சிவசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்த தனது 09.07.2025 நாளிட்ட முறையீட்டு மனுவுடன் அனுப்பியுள்ள 13.06.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது தாயார் அழகுமுத்து என்பவர் பெயரில் சர்வே எண். 89/7 இருந்து வந்த இடத்தில் அப்பகுதி பொதுமக்கள் பங்களிப்போடு சுமார் 100 அடி நீளமும், 10 அடி அகலமும் ஒதுக்கி, சாலையாக பயன்படுத்தி வந்தோம். இந்த நிலையில் புதுவயல் பேரூராட்சி நிர்வாகம் சார்பில் கடந்த 2010ஆம் வருடம் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டு பொதுமக்கள் ஆகிய நாங்கள் பயன்படுத்தி வரும் நிலையில், புதுவயல் பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு. உமாமகேஸ்வரன் என்பவர் அலுவலகத்தில் பணிபுரியும் சில நபர்களுடன் சேர்ந்து வந்து, செல்வந்தராகிய தனிநபர் ஒருவருக்கு சாலையில் மின்கம்பம் நட முயன்றார். அப்போது நான் மற்றும் அருகில் உள்ள வீட்டினர் சேர்ந்து, சாலையில் மின்கம்பம் நட்டால் சாலை குறுகல் ஏற்படும் என்றும் இதனால் போக்குவரத்திற்கு சிரமம் ஏற்படும் என்றும், மழை காலங்களில் மின்சாரத்தினால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றும், எங்களின் கோரிக்கையை முன் வைத்தோம். அதற்கு

எங்களை செயல் அலுவலர் ஒருமையில் பேசியதோடு சாலை தனக்கு சொந்தமானது என்றும் நான் அப்படித்தான் செய்வேன், என்னிடம் அதிகாரம் இருக்கு, எனக்கு தேவையானவற்றை மின்கம்பம் நடும் செல்வந்தர் செய்கிறார் என்று பேசியதோடு, தடுத்தால் போலீசில் புகார் செய்து நடவடிக்கை எடுப்பதாக மிரட்டி சென்றார். ஆகவே, சமூகம் கருணைகூர்ந்து புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலர் உமாமகேஸ்வரனுக்கு அரசு வழங்கிய பணியின் கடமையை செய்யாமல் தனிநபர்களின் அடியாள் போல் செயல்பட்டு வரும் இவர் மற்றும் உடன் வந்த சக பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. சே. உமாமகேஸ்வரன் என்பவர் தனது 08.08.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண்.233/2025/அ2–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

- சிவகங்கை மாவட்டம், புதுவயல் பேரூராட்சி வார்டு எண். 02, நடுவீதி, K. சிவசாமி என்பவரின் தாயாரான அழகுமுத்து என்பவரின் பெயரில் இருக்கும் வீட்டிற்கு மேற்கு புறத்தில் சர்வே எண். 89/7-ல் புதுவயல் பேரூராட்சி நிர்வாகத்தால் கடந்த 2012-2013ஆம் ஆண்டில் இப்பேரூராட்சியின் பொது நிதி திட்டத்தின் கீழ் வடக்கு தெற்காக அமைந்துள்ள 10 அடி தென்வடல் அரசு பொது பாதையில் அரசு நிதியின் கீழ் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டு அப்பகுதி மக்களால் பயன்படுத்தி வந்தனர்.

- மேற்படி இந்த சிமெண்ட் சாலையானது பேரூராட்சியின் வார்டு பகுதிக்குள் அமைந்திருக்கும் உட்புற சாலையாகும். K. சிவசாமி என்பவரின் வீட்டிற்கு சாலையை அடுத்து எதிர்புறத்தில் அமைந்துள்ள வெ. பிரேமா என்பவர் தனது வீட்டிற்கு மின்சார வசதி வேண்டி சம்பந்தப்பட்ட மின் வாரியத்திற்கு கோரிக்கை அளித்து மேற்படி மின்வாரியத்தினால் தெருவிளக்கு மின் கம்பங்கள் அமைப்பதற்கு இடத்தினை ஆய்வு செய்து, மதிப்பீடு தயார் செய்து அதற்கான தொகை ரூ.20,600/-யை மின் வாரியத்திற்கு செலுத்தி மின்வாரிய பணியாளர்களால் அவர் வீட்டின் சிமெண்ட் சாலையின் ஓரத்தில் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படாதவாறு மின் கம்பம் அமைக்க வரும்போது மனுதாரர் K. சிவசாமி என்பவர் தடுத்து நிறுத்தி, மின் பணியாளர்களை இவ்விடத்தில் மின் கம்பங்கள் ஊன்ற கூடாது என தெரிவித்ததால், இச்செயல் தொடர்பாக இப்பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சக பணியாளர்களுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட இடத்திற்கு சென்று தல ஆய்வு செய்யப்பட்ட போது மேற்படி தங்களுக்கு மனு அளித்த K. சிவசாமி என்பவர் இந்த சிமெண்ட் சாலையானது எனக்கு சொந்தமான பட்டா இடத்தில் அமைந்திருக்கும் சாலையாகும். இதில் நீங்கள் தெருவிளக்கு மின்கம்பங்களை ஊன்ற விடமாட்டேன் என தெரிவித்தார்.

- இந்நிலையில் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் 'மனுவில் ஆட்சேபனை தெரிவித்த சிமெண்ட் சாலையானது பேரூராட்சிக்கு சொந்தமான பராமரிப்பின் கீழ் அமைந்துள்ள அரசு பொது சாலையாகும். இப்பொது பாதையில் போடப்பட்ட சிமெண்ட் சாலையானது பேரூராட்சி அரசு நிதியில் போடப்பட்ட சாலையாகும். இதில் சாலை ஓரத்தில் மின்கம்பங்களை ஊன்ற விடாமல் தடுப்பதற்கு உங்களுக்கு உரிமை இல்லை மீறினால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், எனவே அரசாங்கத்தால் அமைக்கப்படும் தெருவிளக்கு மின் கம்பத்தினை நீங்கள்

தடுக்கக் கூடாது என அறிவுறுத்தினார், அதற்கு K. சிவசாமி என்பவர் நான் மின் கம்பத்தினை ஊன்ற விடமாட்டேன் எனவும், அரசாங்கத்தினால் உங்களால் என்ன பண்ண முடியுமோ பண்ணி கொள்ளுங்கள் என மிரட்டி திமிருதனமாக அவதூறாக பேசியும் வீடியோ எடுத்தும் இவ்வீடியோவினை சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார் என்ற விவரத்தினை பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

- மேலும் மேற்கண்ட நேரடி தல ஆய்வின் போது செயல் அலுவலருடன் சம்பந்தப்பட்ட வார்டு வரி தண்டலர் அவர்களும், இளநிலை உதவியாளரும் உடன் இருந்தார். அப்போது மனுதாரர் K. சிவசாமி வசித்து வரும் வீடானது சில ஆண்டுகளுக்கு மேலாக பழைய ஓட்டு வீட்டு கட்டிடத்தினை இடித்து விட்டு புதிதாக 1200 சதுரடி பரப்பளவில் RCC கட்டிடம் பேரூராட்சியில் கட்டிட அனுமதி வாங்காமல் இவ்வீட்டிற்கு புதிதாக சொத்துவரி விதிக்கப்படாமல் சொத்துவரி செலுத்தாமலே இருந்து வருவது வரி தண்டலர் தெரிவித்தார். உடனே பேரூராட்சிக்கு உரிய கட்டணங்கள் செலுத்தாமல் கட்டிட அனுமதி பெறாமல் அரசாங்கத்தினை பல ஆண்டு காலமாக ஏமாற்றி வரும் இவர், வசித்து வரும் வீட்டின் உரிமையாளரான தாயாருக்கு பேரூராட்சி அலுவலக கடித ந.க. எண். 233/2024/அ2, நாள் 11.06.2025ன்படி அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டு 7 தினங்களுக்குள் கட்டிட வரைபட விண்ணப்பத்தினை SWP இணையதளத்தில் சமர்ப்பிக்கப்பட்டு கட்டிட அனுமதி பெறுவதற்கு அறிவுறுத்தப்பட்டு தவறும்பட்சத்தில் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற அபிவிருத்திகளை அகற்றுதல்) விதிகள் 2022-ன்படி உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கடிதத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டது.

- மேற்படி, பேரூராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மற்றும் பேரூராட்சியின் சாலை பதிவேட்டின்படி பராமரிக்கப்பட்டு வரும் இந்த சிமெண்ட் சாலையில் மின் வாரியத்திற்கு மின் கம்பங்களை ஊன்றுவதற்கான செலவின தொகையினை மனுதாரர் செலுத்தி பேரூராட்சிக்கு சொந்தமான சாலையின் ஓரத்தில் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாமல் மின் கம்பங்களை ஊன்றுவதற்கு தனிநபர்கள் எவருக்கும் தடுப்பதற்கு அதிகாரம் இல்லை எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

- மேலும் நகருக்குள் உட்புறமாக அமைந்திருக்கும் அரசு பொது போக்குவரத்து சாலை அல்லாத இச்சாலையின் ஓரத்திலேயே ஏற்கனவே இரண்டு மின் கம்பங்கள் அமைக்கப்பட்டும் உள்ளது. அப்படி இருக்கும் தருவாயில் இவர் வேண்டுமென்றே எதிர்வீட்டுதாரரிடம் உள்ள பிரச்சனை காரணமாக பேரூராட்சியின் சாலை எனது பட்டா இடத்தில் உள்ளது என தெரிவித்து மின் கம்பங்கள் ஊன்ற விடாமல் தடுத்தும், உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு பேரூராட்சி நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் விதமாக புகார் அளித்தும், தனது வீட்டிற்கே உரிய கட்டணங்களை செலுத்தி முறையான கட்டிட அனுமதி பெறாமல் அரசுக்கு உரிய சொத்துவரி செலுத்தாமல் அரசாங்கத்தினை ஏமாற்றி வரும் இவர் போக்குவரத்திற்கு சிரமம் ஏற்படும் எனவும் மின்கம்பம் நட்டால் சாலை குறுகல் ஏற்படும் எனவும் மழைக்காலங்களில் மின்சாரத்தினால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என அவதூறு பரப்பி தெரிவித்த புகார் மனுவினை தள்ளுபடி செய்து தீர விசாரித்து தக்க தீர்ப்புரையினை வழங்கி, அரசினை மதிக்காமல் செய்து வரும் K. சிவசாமி என்பவரின் செயலுக்கு உரிய ஆணை பிறப்பித்து வழங்கிடுமாறு இதன் மூலம் பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. K. சிவசாமி மற்றும் எதிர்மனுதாரரான புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 09.09.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.09.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. K. சிவசாமி என்பவர் 09.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "சிவகங்கை மாவட்டம், புதுவயல் பேரூராட்சிக்குட்பட்ட எனது தாயார் அழகுமுத்து என்பவரின் பெயரில் இருந்த புல எண். 89/7-ல் (நடுவீதி) இப்பகுதி பொதுமக்களின் பங்களிப்புடன் சுமார் 100 அடி நீளம் மற்றும் 10 அடி அகலம் கொண்ட சாலையாக பயன்படுத்தி வந்த நிலையில் 2010ஆம் ஆண்டில் பேரூராட்சி மூலம் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது. தற்போது இச்சாலையில் தனிநபர் ஒருவரின் நலனுக்காக முறைகேடாக மின்கம்பம் நடுவதற்கு பேரூராட்சி செயல் அலுவலர் உள்நோக்கத்துடன் செயல்படுகிறார். மேலும் இது தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.(MD) எண். 17308 of 2025, A.E.E. ஆகியோரை எதிர்மனுதாரராக சேர்த்து தொடரப்பட்ட வழக்கில் மனுதாரரின் 12.06.2025, 16.06.2025 நாளிட்ட மனுவினை 4 வார காலத்திற்குள் பரிசீலித்து உரிய ஆணை பிறப்பிக்கவும், under ground cable அமைப்பதற்கான சாத்தியக்கூற்றினை ஆராயவும் 26.06.2025 நாளிட்ட தீர்ப்புரையில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது எனவும், மின்கம்பம் அமைப்பதால் சாலையின் அளவு குறைந்தும், மழைகாலத்தில் மின்கம்பத்தினால் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் எனவும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, பேரூராட்சியால் அமைக்கப்படவுள்ள மேற்காணும் மின்கம்பத்தை அகற்றுவதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. சே. உமாமகேஸ்வரன் என்பவர் 09.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- ''சிவகங்கை மாவட்டம், புதுவயல் பேரூராட்சி வார்டு எண். 02, நடுவீதி, K. சிவசாமி என்பவரின் தாயாரான அழகுமுத்து என்பவரின் பெயரில் இருக்கும் வீட்டிற்கு மேற்கு புறத்தில் சர்வே எண்.89/7ல் புதுவயல் பேரூராட்சி நிர்வாகத்தால் கடந்த 2012-2013ஆம் ஆண்டில் இப்பேரூராட்சியின் பொது நிதி திட்டத்தின் கீழ் வடக்கு தெற்காக அமைந்துள்ள 12 அடி தென்வடல் அரசு பொது பாதையில் அரசு நிதியின் கீழ் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டு அப்பகுதி பொதுமக்களால் பயன்படுத்தி வந்தனர்.

- மனுதாரர் K. சிவசாமி என்பவரின் வீட்டிற்கு எதிர்புறத்தில் குடியிருக்கும் வெ. பிரேமா என்பவர் தனது வீட்டிற்கு மின்சார வசதி வேண்டி சம்பந்தப்பட்ட மின் வாரியத்திற்கு கோரிக்கை அளித்து மின்கம்பம் அமைப்பதற்கு ரூ.20,600/-ஐ மின்வாரியத்திற்கு செலுத்தியுள்ளார். அதனடிப்படையில் வெ. பிரேமா என்பவருடைய வீட்டின் சாலை ஓரத்தில் ஏற்கனவே இரும்புக் கம்பி ஊன்றியுள்ளதை எடுத்துவிட்டு அதே இடத்தில் ஓரமாக மின்கம்மம் அமைக்க மின்சார பணியாளர்கள் வந்த சமயத்தில் மனுதாரர் K. சிவசாமி என்பவர் தடுத்து நிறுத்தியுள்ளார்.

- மனுதாரர் தனது தாயாருக்கு சொந்தமானது என தெரிவிக்கும் சிமெண்ட் சாலையானது பேரூராட்சிக்கு சொந்தமான பராமரிப்பின் கீழ் அமைந்துள்ள அரசு பொது சாலையாகும். இதனை பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலை பதிவேட்டிலும், சொத்துப் பதிவேட்டிலும் இருப்பதை உறுதி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் சாலையானது தானம் மூலமாக பேரூராட்சிக்கு சொந்தமானது என்பதற்கான வருவாய்த் துறையின் ஆவணங்களின் நகல்களை 15 நாட்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

- மேலும் இச்சாலையானது அரசின் நிதி மூலம் சிமெண்ட் சாலையாக அமைக்கப்பட்டது. இந்நிலையில், தனிநபர்கள் எவருக்கும் மின்கம்பம் அமைப்பதை தடுப்பதற்கு அதிகாரம் இல்லையெனவும் தெரிவிக்கிறேன். எனவே மனுதாரர் பேரூராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் வேண்டுமென்றே புகாரினை தெரிவித்துள்ளார் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. இதற்கிடையில் புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலர், தனது 19.11.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 233/2025/அ2-ல் மின்கம்பம் அமைப்பதற்கான விண்ணப்பத்தினை மின்வாரியத்தினால் இரத்து செய்துள்ளதையும் மற்றும் புல எண். 89/7-ல் உள்ள பொதுப்பாதையை புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலரின் பெயருக்கு நில உடமை மாற்றம் செய்து தரக் கோருவது குறித்தும் தனது விளக்க அறிக்கையில் பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

"சிவகங்கை மாவட்டம், புதுவயல் பேரூராட்சி வார்டு எண்.02, நடுவீதி, K. சிவசாமி த/பெ. குமரப்பன் என்பவரின் பெயரில் இருக்கும் வீட்டிற்கு மேற்குபுறத்தில் சர்வே எண். 89/7-ல் புதுவயல் பேரூராட்சி நிர்வாகத்தால் கடந்த 2012-2013ஆம் ஆண்டில் இப்பேரூராட்சியின் பொது நிதி திட்டத்தின் கீழ் வடக்கு தெற்காக அமைந்துள்ள 10 அடி தென்வடல் அரசு பொதுபாதையில் அரசு நிதியின் கீழ் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டு அப்பகுதி பொதுமக்களால் பயன்படுத்தி வந்த நிலையில் வெ. பிரேமா என்பவர் தனது வீட்டிற்கு மின்சார வசதி வேண்டி சம்பந்தப்பட்ட மின் வாரியத்திற்கு கோரிக்கை அளித்து மேற்படி மின்வாரியத்தினால் தெருவிளக்கு மின் கம்பங்கள் அமைப்பதற்கு இடத்தினை ஆய்வு செய்து, மதிப்பீடு தயார் செய்து அதற்கான தொகை ரூ.20,600/-யை மின் வாரியத்திற்கு செலுத்தி மின்வாரிய பணியாளர்களால் அவர் வீட்டின் சிமெண்ட் சாலையின் ஓரத்தில் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு

ஏற்படாதவாறு மின் கம்பம் அமைக்க வரும்போது மனுதாரரான K. சிவசாமி என்பவர் தடுத்து நிறுத்தி, மின் பணியாளர்களை இவ்விடத்தில் மின் கம்பங்கள் ஊன்ற கூடாது என பிரச்சனை உருவாகி, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சிவசாமி த/பெ. குமரப்பன் என்பவரால் புகார் அளிக்கப்பட்டு கடந்த 09.09.2025 தேதியன்று விசாரணை நடைபெற்று முடிவுற்றது.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட மின்வாரியத்தினால் மின் கம்பம் அமைப்பது தொடர்பாக, எதிர்வீட்டுதாரர்களின் ஆட்சேபனையால், மின்வாரியத்தினால் மின் கம்பம் அமைப்பதற்கான விண்ணப்பத்தினை இணையதளம் மூலமாகவே இரத்து செய்து உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மின்வாரியத்திற்கு வெ. பிரேமா செலுத்தப்பட்ட தொகையும் அவருக்கு திரும்ப வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும், சிமெண்ட் சாலையினை பேரூராட்சியின் சாலை பதிவேடு மற்றும் சொத்து பதிவேட்டின்படி இப்பேரூராட்சிக்கு சொத்தாக்கம் செய்யப்பட்டுள்ள இச்சாலையினை நில அளவீடு செய்து புதுவயல் பேரூராட்சியின் செயல் அலுவலர் பெயருக்கு நில உடமை மாற்றம் செய்து பட்டா வழங்கிடுவதற்கும், இப்பேரூராட்சி அலுவலக கடித ந.க. எண். 233/2025/அ2, நாள் 10.09.2025ன்படி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு, தகவல் தெரிவிக்கப்பட்டும், சம்பந்தப்பட்ட வருவாய் துறையினரால் இப்பேரூராட்சிக்கு நில உடமை மாற்றம் செய்வதற்கு தொடர் நடவடிக்கையிலும் இருந்து வருகிறது என்ற விவரத்தினையும் இதன்மூலம் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரர் திரு. K. சிவசாமி என்பவரின் புகார்மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கைகள் மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம், புதுவயல் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. K. சிவசாமி என்பவர் தனது 09.07.2025 நாளிட்ட முறையீட்டு மனுவுடன் அனுப்பியுள்ள 13.06.2025 நாளிட்ட மனுவில் சிவகங்கை மாவட்டம் புதுவயல் பேரூராட்சிக்குட்பட்ட மனுதாரரின் தாயார் அழகுமுத்து என்பவரின் பெயரில் இருந்த புல எண். 89/7-ல் (நடுவீதி) இப்பகுதி பொதுமக்களின் பங்களிப்புடன் சுமார் 100 அடி நீளம் மற்றும் 10 அடி அகலம் கொண்ட சாலையாக பயன்படுத்தி வந்த நிலையில், 2010ஆம் ஆண்டில் பேரூராட்சி மூலம் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது எனவும் தற்போது இச்சாலையில் தனிநபர் ஒருவரின் நலனுக்காக முறைகேடாக மின்கம்பம் நடுவதற்கு பேரூராட்சி செயல் அலுவலர் உள்நோக்கத்துடன் செயல்படுகிறார் எனவும், மின்கம்பம் அமைப்பதால் சாலையின் அளவு குறைந்தும், மழைக்காலத்தில் மின்கம்பத்தினால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் எனவும் புகாராக தெரிவித்துள்ளார்.

மனுதாரர் K. சிவசாமி என்பவரின் குடியிருப்புக்கு எதிரில் வசிக்கும் வெ. பிரேமா என்பவர் தனது வீட்டிற்கு மின்சார வசதி வேண்டி விண்ணப்பம் செய்து மின்கம்பம் அமைப்பதற்கு ரூ.20,600-ஐ மின்வாரியத்திற்கு செலுத்தியதன் அடிப்படையில் அவருடைய வீட்டின் சாலை ஓரத்தில் மின்கம்பம் அமைக்க புதுவயல் பேரூராட்சி பணியாளர்கள் மற்றும் மின்வாரியத்தினரால் நடவடிக்கை மேற்கொள்ளும் சமயத்தில் மின் கம்பம் அமைக்கப்படவுள்ள இடமானது தனக்கு சொந்தமான பட்டா இடத்தில் அமைந்திருக்கும் சாலை என்பதால் மின்கம்பத்தை ஊன்றக்கூடாது என மனுதாரர் K. சிவசாமி ஆட்சேபனை தெரிவித்திருந்தார்.

மேலும் மின்கம்பம் அமைப்பதை எதிர்த்து அழகுமுத்து மற்றும் மூவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடர்ந்த வழக்கில் (W.P.(MD) No,17308 of 2025 மற்றும் (W.M.P.(MD) No,13201 of 2025) 26.06.2025 நாளிட்ட தீர்ப்புரையில் மனுதாரர்களின் கோரிக்கை குறித்து 4 வாரத்திற்குள் தகுதியின் அடிப்படையில் பரிசீலித்து உரிய ஆணையை வழங்குமாறு புதுவயல் மின்வாரியத்திற்கு அறிவுறுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் வெ. பிரேமா என்பவரின் வீட்டின் ஓரத்தில் மின்கம்பம் அமைப்பது தொடர்பாக எதிர் குடியிருப்புதாரர்களின் ஆட்சேபனையால், வெ. பிரேமா என்பவர் சமர்ப்பித்த மின்கம்பம் அமைக்கக் கோரும் விண்ணப்பத்தினை மின்வாரியத்தால் இணையதளம் மூலம் 02.07.2025 அன்று இரத்து செய்து, அவர் செலுத்திய தொகையும் மின்வாரியத்தால் திரும்ப வழங்கப்பட்டுள்ளது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் அறிய முடிகிறது. இந்நிலையில் புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. V. சிவசாமி,
73, நடுவீதி,
புதுவயல், காரைக்குடி வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
புதுவயல் பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்